10-55 மணி

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1990—91."

8. முதல் துணை நிதிநிலை அறிக்கை 1990-91 பொது விவாதம் மற்றும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—8—1990 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''